**சிலாபம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 11 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிலாபம் நகர சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபைக்குரித்தான இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் தரிப்பிடத்திற்காக மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைக் கட்டணமான ரூபா 375,000 பெறுமதியும் ரூபா 2,343,000 பெறுமதியுமான 818555 ஆம் இலக்க மக்கள் வங்கி நிலையான வைப்பிற்காக 2013 மே 14 ஆம் திகதி முதல் 2013 நவம்பர் 14 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 147,641 தொகையான வட்டி வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 477,390 தொகையான சம்பள மீளளிப்பு வருமானமும் ரூபா 193,590 தொகையான சேமிப்பு வைப்பிற்காகப் பெறவேண்டிய வட்டியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வருமானப் பதிவேட்டின் படி பட்டியலிடப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தல வாடகை, வியாபார நிலைய வாடகை மற்றும் வீதவரி வருமானத் தொகையான ரூபா 3,224,770 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, பட்டியலிடப்பட்ட மீண்டெழும் வருமானக் கூட்டுத்தொகையான ரூபா 402,688 தொகையான குழாய் பொருத்தப்படுவதற்கான கட்டணமும் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணக் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிராததுடன் நிலுவை

முத்திரைக் கட்டணமான ரூபா 13,822,446 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் முதல் மூன்று மாதங்களுக்குள் களஞ்சியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 145,162 இருப்பின் பெறுமதி தவறாக முற்கொடுப்பனவு முற்பணக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் கைத்தொழில் கடன்கொடுத்தோருக்காக ரூபா 380,376 தொகையான குறை ஏற்பாட்டிற்காக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர சபை வீதி அபிவிருத்திக்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 2,825,494 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீள ரூபா 7 மில்லியன் தொகைக்காக செயற்திட்டத்தின் மொத்தக் கிரயத்திற்கான ஓர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மீள ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோரும் மூலதனச் செலவினமும் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ஆண்டின் இறுதியில் எஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 6,701,664 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் மார்ச் 31 ஆம் திகதி வரை மாத்திரம் களஞ்சிய முற்பணக் கணக்கின் படி இருப்புப் பெறுவனவு ரூபா 1,451,628 தொகையான போதிலும் காசேட்டின் படி அக் காலத்தின் போது களஞ்சிய முற்பணத்தின் மூலம் கொள்வனவு ரூபா 97,025 மாத்திரமேயாகக் காணப்பட்டது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் படி, 08 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 144,858,111 தொகையானதுடன் பட்டோலைகளின் படி உரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 147,960,583 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 3,102,472 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதி கண்டறியப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான வினோத வரித் தொகையான ரூபா 501,257 அறவிடப்படுவது சந்தேகத்திற்கிடமாகக் காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 67,768,317 தொகையாகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 10,193,902 தொகை ஒரு வருட காலம் கடந்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 90,205,613 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரித்தான கொடுக்கல்வாங்கல்கள் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,186,075 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,060,148 ஆக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் வரையறைக்குள் நிரந்தரமான அறிவித்தல் பலகைகள், பதாதைகள் வெளிப்படுத்தப்படுவதற்குரிய வழிகாட்டல்களும் கட்டணங்களும் அறவிடப்படுவது தொடர்பாக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டிராததுடன் கட்டண அறவீடுகள் சபைத் தீர்மானத்தின் படி மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் அத்துமீறிய மற்றும் தேவையற்ற பகுதிகளில் வெளிப்படுத்தப்படும் அறிவித்தல் பலகைகளை அகற்றுவதற்கோ அல்லது அவற்றிற்கு வரையறைகள் விதிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது இயந்திர உபகரண பழுதுபார்ப்பிற்காக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 1,285,852 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோருக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செலவினங்களுக்காக வருடாந்தப் பாதீட்டின் மூலம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்திட்டம் தாமதிக்கப்படல்**

மீளாய்வாண்டின் போது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு பெறுமதி ரூபா 2,686,500 தொகையான 13 கைத்தொழில் துறைகள் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

“திண்மக் கழிவு முகாமைத்துவம்” தொடர்பாக 2010 ஆம் ஆண்டு முதல் செயற்திட்ட அறிக்கை மற்றும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இவை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு